ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா ரூபா 5, தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம், மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4642

திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 15—9—46 | இதழ் 20

இராமாயணத்திலுள்ள வீர ஆண்மை மனிதனுக்கு உபயோகப்படாது.

(கைவல்யம்)

முன்னோர் கொடுத்த அந்த இராமாயணப் பொக்கிஷம் நாமத்தையும், பொங்கல் புளியோதரையையும் கொடுத்ததேயல்லாமல் ஆண்மையைக் கொடுக்கவில்லையென்று முன் வியாசத்தில் சொன்னேன். இதில், இராமாயணத்திலுள்ள வீரமும், ஆண்மையும், கற்பனை உலகத்தையும், கடவுளையும் சேர்ந்ததென்றும், அது, நமது உலகுக்கும், நமக்கும் உபயோகப்படக் கூடியதல்ல என்பதை எழுதுகிறேன். கல்வி மந்திரிக்காக நான் இதை எழுதவில்லை. அவர் பேச்சையும் இதிலுள்ளதையும் ஒத்துப் பார்க்கவே இதை எழுதுகிறேன். "உண்மைக்குப் பரிந்து பேசும் குணம் நமது நாட்டில் சுருக்கமாய் விட்டமையால் நமது நாடு வீழ்ச்சியடைந்தது" என்று கவிதாகூர் சொன்னபடி, நமது நாட்டுப் படித்தவர்கள், பண்டிதர்கள் இச்சகத்திற்கும் இதத்திற்கும் ஆளாவதுபோல் உண்மைக்கு ஆளாவதில்லை.

"கம்ப இராமாயணம் ஒரு வீர காவியம். கதைகளில் காணும் பாத்திரங்களில் சுர அசுர பாகுபாடின்றி எல்லோரிடமும் ஆண்மை, வீரம் காணப்படுகிறது. இந்த ஆண்மை காரணமாக ஒரு காலத்தில் தமிழ் நாட்டு நாகரிகம் உலகம் போற்றக்கூடியதாக இருந்தது." என்று கல்வி மந்திரி சொல்லுகிறார். அது உண்மையே. அந்த நாகரிகம் எங்கே போயிற்று? எப்படிப் போயிற்று? கம்பராமாயணம் வந்தபின் ஆரிய நாகரிகத்துக்குள் அகப்பட்டு அழிந்து போயிற்று என்பதைக் கல்வி மந்திரி அறிந்திருக்க வேண்டும். இதில் பல விஷயங்களை எடுத்துக் காட்டவேண்டும்.

வடதேசத்திற்கு இராமன் என்னும் இராசாவையும், தென்தேசத்திற்கு இராவணன் என்னும் இராசாவையும், இராமர் விஷ்ணு அவதாரமென்றும், இராவணன் பிரம்மாவின் பேரப்பிள்ளையென்றும் கற்பித்துக் கதை எழுதினார்கள். அந்தக் கதையில் கல்வி மந்திரி சொன்னபடி சுர அசுர இருதாரத்தார் வீரம் மட்டுமல்ல, குரங்குகள், கரடிகள், பட்சிகள் வீரமும், ரிஷி, முனி, பிராமணர் என்பவர்களின் பிராமணச் சாபம் என்கிற வீரமும் சேர்ந்திருக்கிறது. எல்லா ஆண்மை, வீரத்தைக் காட்டிலும் பிராமணச் சாப வீரம் மகா சக்தி வாய்ந்தது. அதைச் சொல்வதுதான் இராமாயணம். நேராகச் சொல்லாமல் ரிஷி, முனி, தபசிகள் சாபம் என மறைத்துக் கூறுகிறது. தேவர் ரிஷி, முனி, தபசி, வேதம், வேடம் என்பவைகளெல்லாம் பிராமணனையே குறிக்கும். அந்த அர்த்தம் வரும்படியாகவே கதையும் எழுதினார்கள். சொல்லவும் செய்தார்கள். விஷ்ணு இராமாவதாரம் எடுப்பதற்கும் இராவணன் பிறப்பிற்கும், காரணமாக இருந்த கதைகளில் அவை நன்றாகத் தெரியும். பிராமணச் சாபம் மகாவிஷ்ணுவால்கூடப் போக்க முடியாதென்று அதில் எழுதப்பட்டிருக்கிறது. இலட்சுமி சீதையாகப் பிறந்ததற்கு நாரத மகாரிஷி சாபம். இராமாயணத்தில் காணும் சமய இதிகாச புராணங்கள் மனித அறிவுக்கு ஒத்து வராமையால் தள்ளப்படும் இந்தக் காலத்தில், சமய வாதங்கள் விஞ்ஞான சாத்திரத்தால் நழுவும் இந்தக் காலத்தில், ஆங்கிலம் படித்துச் சட்டங்கள் தெரிந்து ஆங்கிலேயரிடம் அரசாட்சி ஏற்றுக் கொண்டிருக்கும் நமது கல்வி மந்திரி கம்பராமாயணத்திலிருந்து ஒரு புது இந்தியாவைச் சிருஷ்டிக்கப் போகிறேன் என்று சொல்லுகையில், அந்தக் காலத்தில் பிராமணச்சாபத்திற்குப்பயந்து அரசு செய்த மந்திரிகளின் அரசாட்சியில் திராவிடர்களின் நாகரிகம் மங்கிப்போனதில் ஆச்சரியமில்லை.

இராமாயணத்தின் வீரம், ஆண்மையில் முதல் வீரம் இராமனைச் சேர்ந்தது. இராமர் பெரிய தெய்வமான மகாவிஷ்ணு. பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷன் அவதாரம் தம்பி இலட்சுமணன். இந்திரஜித்தைக் கொல்ல அன்னம், தண்ணீரில்லாமல் பதினான்கு வருஷம் விரதம் இருந்தவன். பாம்பு பலநாள் ஆகாரமில்லாமல் இருக்குமாம். மகாவிஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷனின் அவதாரமான இலட்சுமணன் எத்தனை நாள் வேண்டுமானாலும் அன்னமில்லாமலிருக்கலாம். சீதையோ இலட்சுமி. இராமருடைய வில்லோ சிவபெருமானுடையது. பாணங்களெல்லாம் ரிஷிகளுடையன. அவைகளை இராமர் 'போ' என்றால் போகும், 'வா' என்றால் வரும். கடைசிநாள் இராம இராவணன் சண்டையில், இராவணன் விடும் பாணங்களெல்லாம் இராமனைக் கண்டு ஓடிவிடுகையில், இராவணன், இராமனை "இவன் மும்மூர்த்திகள் அல்ல, மும்மூர்த்திகளிடம் சண்டை போட்டிருக்கிறேன், அவர்களுடைய சக்தி எனக்குத் தெரியும், தவசு செய்து வரம் பெற வயதுமில்லை. ஆதலால் வேதத்திற்கு முதற்காரணமான ஆதிதெய்வம் இந்த இராமன் தான்" என்று சொன்னான். இராமர் வேதத்திற்குக் காரணம் என்றும் ஆதிதெய்வமென்றும் கம்பர் பாடாவிட்டால் ஸ்ரீரங்கத்து ஐயங்கார்கள் கம்பராமாயணத்தை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அந்த ஆதி தெய்வத்தின் வீரத்தை நாம் கற்றுக் கொள்வது எப்படி? அது நமக்கு எவ்விதம் வரும்? வந்திருந்தாலும் வருவதாயிருந்தாலும் இராமாயணம் எழுதியபின் பல நூற்றாண்டுகளாகப் பல சாதிக்காரர்களால் அடிபட்டுச் சீரழிகிறோமே! ஒரு பாணமாவது கற்றுக்கொண்டோமா? கற்றுக்கொண்டு நம்முடைய சீரழிவைத் தடுத்தோமா? இல்லை. எனவே அவ்வீரம் நமக்கு உபயோகப்படாது, எவ்வளவோ காலமாகியும் உபயோகப்படவில்லை.

கல்வி மந்திரி செட்டியார் அவர்கள் இராமாயணம் படித்திருப்பார். 'அந்தணர்களைப் பேணுதி உள்ளத்தால்" என்றதையும் இராமர் தன் பொருளையெல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்துத் தன் மனைவியின் பொருளையும் கொடுக்கச்செய்து மற்றவர்களையும் அவ்வழியிலேயே நடக்கவுஞ்செய்த இராமாயண வீரமும் தெரிந்திருப்பார். இராமாவதாரம் எடுப்பதற்கு முன் மகாவிஷ்ணு சொன்னதைப் படித்திருக்க மாட்டார். தன் வீர ஆண்மையைக் காட்டவும் அதை மக்களுக்குக் கற்றுக் கொடுக்கவும் அவர்கள் கற்றுக் கொள்ளவுமேதான் பூலோகத்திற்குப் போவதாக மகாவிஷ்ணு சொல்லவேயில்லை. வேதத்தைக் காப்பாற்றி, வேத வேள்விகளுக்கு விரோதிகளாயிருப்பவர்களைக் கொன்று, ரிஷிகளை ரட்சித்துத் தேவர்களுக்கெல்லாம் அவிர்ப்பாகம் சரியாகச் சேர்ப்பதற்காகவேதான் அவதாரம் எடுப்பதாகச் சொன்னார். வேதம், ரிஷி, வேள்வி, தேவர்கள் என்றால் அது பிராமணர்களைத்தானே குறிக்கும். ஆகவே இராமாயணத்திலிருக்கும் இராமருடைய வீர ஆண்மை மனிதனுடையதல்ல; மனிதன் கற்றுக் கொள்ளவும் முடியாது; அவைகளெல்லாம் கற்பனா உலகத்தில் கவிகளின் சஞ்சாரம். ஆனாலும் இராமாயணம் எதற்காக எழுதப்பட்டதோ அந்த வீர ஆண்மையைக் கற்றுக் கொடுத்தது, கற்றுக் கொண்டோம். இராம பஜனை, நாமம், துளசிமாலை, உண்டியல், பெருமாள் பிரசாதம், ஊர் ஊராய் அர்ச்சனை வரி இவைகளெல்லாம் சேர்ந்த மோட்சம் இவைகள்தான்

(5-ம் பக்கம் பார்க்க)

சொன்னோம்! சொல்கிறார்கள்!!

—(ஃ)—

உண்மையான விடுதலைத்திட்டம், இன அரசு அமைப்பதே தவிர, ஆளும் கூட்டம் மாறி, வேறோர் கூட்டம் வருவது என்பதல்ல. அந்தந்த வர்க்கத்துக்கு ஏற்ற வட்டாரம் இங்கு அமைந்திருக்கிறது என்று நாம் பல ஆண்டுகளாகக்கூறி வந்தோம். அதுபோது, நிந்திக்கப்பட்டோம்; கண்டிக்கப்பட்டோம். சகித்துக் கொண்டோம்; ஏன்? உண்மையை எப்படியும் மறைக்கமுடியாது —ஒருநாள் வெளிவந்தேதீரும் என்று.

தோழர் M. P. சிவஞானக்கிராமணியார், காங்கிரசார். அவர் 1946 ஜூன்மாதம், திட்டிய, 'தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்,' என்ற அரியநூலில், இதேவிதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அவைகளை இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

நடுநிலை நண்பர்கள் சீர்தூக்கிப்பார்க்கவேண்டுகிறோம்.

தோழர் M.P. சிவஞானக்கிராமணியாரின் இந்த அரியநூல், தென்றல் காரியாலயம், தியாகராயநகர், சென்னை, என்ற இடத்தில் கிடைக்கும். விலை 6 அணா.

சொன்னோம்!

(1)

இமயமலைக்குத் தென்பாலுள்ள நாடுகள் எல்லாம ஒரு நாடு என்றோ, மக்கள்எல்லாரும் ஒரே நேஷன் என்றோ சொல்ல முடியாது. பாஷை, உடை, மதம் முதலிய விஷயங்களில் அவர்களுக்குள் பல சிறப்பட்ட வித்தியாசங்கள் இருந்து வருகின்றன. இந்தியா பலசமுகங்களைக் கொண்ட நாடு.

"விடுதலை" 5-2-38

(2)

தட்சிணத்தில் மகாராஷ்டிரம், கோசலம், கலிங்கம், ஆந்திரம், கொங்கணம், தான்யகடகம், திராவிடசோழ நாடுகள், இன்னும், மலையகூடத்து ஒன்பது சமஸ்தானங்களும் தனித் தனி அரசாட்சி புரிந்து வந்தன.

"திராவிடநாடு" 25-3-45

(3)

அசோகர், கனிஷ்கர், அக்பர் முதலிய மன்னாதி மன்னர்கள் தமது படைபலம்,இராசதந்திரம் முதலியனவற்றைத் துணை கொண்டு பார்த்தும் ஒரேநாட்டு ஆட்சி என்ற முறையை நிலைநிறுத்தப் பாடுபட்டுத் தோற்றனர். அசோக இராச்சியத்தில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. சேர, சோழ, பாண்டிய, சசிபுத்திரர் என நாலுதனி ஆட்சிகள் இருந்தனஎன்று அசோகர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

"விடுதலை" 10-4-40

(4)

பிளவும் பேதமும் கொண்டதாக இருக்கும்படி "இந்தியா" இருப்பதன் காரணம்,'இந்தியா' என்ற ஒரு பூகோளப்பித்தலாட்டத்தை உற்பத்தி செய்ததாலேயாகும்.இங்குஒரேநாடுஒரேஆட்சி இருந்ததில்லை; ஒரே இனமல்ல இங்கிருப்பது. 'இந்தியா' என்ற ஒருநாடு இருக்கிறதாகச் செய்யப்பட்டது, ஆட்சிமுறைக்கும் —வியாபார வசதிக்கும் சௌகரியம் எனக்கருதப்பட்டதாலோ வேறு காரணம் பற்றியோ,பிரிட்டன், "இந்தியா ஒருநாடு" என்ற எண்ணத்தைப் பக்தி சிரத்தையுடன் புகுத்தி விட்டது.

"திராவிடநாடு" 27-9-42

(7-ம் பக்கம் பார்க்க)

சொல்கிறார்கள்!!

(1)

இந்தியாவிலுள்ள நாடுகள்ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இனத்தினர் வாழ்கின்றனர். அந்த இனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மொழி நாகரிகம், சரித்திரம் ஆகியவைகள் இருந்து வருகின்றன.

(2)

மேலும், இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்குங்கால் மேற்சொன்ன நாடுகள் ஒவ்வொன்றிலும் தனித்தனி அரசாங்கங்கள் நடந்து வந்திருப்பதாகவும் தெரிகிறது.

(3)

சரித்திரம் தொடங்கிய காலத்தில் இருந்து சிற்சில சமயங்களில்மட்டும் இந்தியாவின்பெரும் பகுதிகள் ஒரேமன்னரால் ஆளப்பட்டதாகத் தெரிகிறது. அசோக சாம்ராச்சியம் மொகலாயசாம்ராச்சியம் ஆகியவற்றை இவற்றிற்குச் சான்றாகக் கூறலாம். அப்போதும்கூட அந்தச் சாம்ராச்சியத்திற்குக் கட்டுப்படாமல், கப்பஞ் செலுத்தாமல், தனித்து நின்று சுதந்தரமாக அரசாண்டனர் நம் தமிழ்மன்னர்கள்.

(4)

ஆங்கிலேயர்களால் இந்தியாவில் ஒரே அரசாங்கத்தை நிலைக்கச் செய்வதும், இந்தியா ஒரே 'நாடு என்ற எண்ணத்தைப் பரப்புவதும் ஓரளவு முடிந்தது என்பது உண்மைதான். ஆனால், அவர்கள் யாருடைய நன்மைக்காக அப்படிச் செய்தார்கள்? நமக்காக அல்ல. ஏகாதிபத்யம் என்றென்றும் நிலைத்து நிற்கவேயாகும். பலநாட்டுத் தத்துவத்தைவிட "ஒருநாடு" என்றதத்துவமே ஏகாதிபத்யத்திற்கு உயிராக இருந்தது. ஆனால், பிரிட்டிஷார் கற்றுத்தந்த 'இந்தியா ஒரே நாடு,' "இந்தியர் அனைவரும் ஒரே இனம்" என்ற பாடங்கூட இந்தியாவிலுள்ள தேசிய இனங்கள் தங்கள் தங்கள் தனித்தஇன உணர்ச்சியையும், பண்பாட்டுப் பற்றையும் மறக்கச்செய்யத் தவறிவிட்டது. காரணம் என்ன? இது தவறானதும் இயற்கைநிலைக்குப் பொருந்தாததுமேயாகும்.

ஆசிரியர் நிலைமை

(தமிழன்)

★

ஆசிரியர்களை அவமதித்துவிட்டார் சென்னை மாகாணக்காங்கிரஸ் சர்க்காரின் பிரதம மந்திரி பிரகாசம். உலக மக்களின் அறிவுத்திறனுக்குக் காரணமான ஆசிரியர்களை அவமதித்துவிட்டார். அன்பையும், ஆற்றலையும், வீரத்தையும் புகட்டும் பள்ளிக்கூட ஆசிரியர்களை அவமதித்துவிட்டார் பிரதமர் பிரகாசம்.

கடந்த ஜூலைமாதம் 27ந்தேதி சென்னையில் ஆசிரியர்கள் 1200 பேர் ஒன்று சேர்ந்து, தங்கள் குறைகளைத் தெரிவிக்கப் பிரதம மந்திரியையும், கல்வி மந்திரியையும் பேட்டிக்காணச் சென்றபோதுதான் அவமானம் நேர்ந்தது.

கல்வி மந்திரி காட்சி கொடுத்தார். "நான் கப்பன் மகாநாட்டுக்குச் செல்ல வேண்டும். மேலும் எனக்கு வேலை அதிகமிருக்கிறது. நான் சென்று வருகிறேன்" என்று மறைந்தார். அடியோடு மறையட்டும்.

பிரதமர் பிரகாசம் மேல்மாடியில் பிரகாசித்தார். கதிரவன் விண்ணில்பிரகாசிப்பதுபோன்று தான் மேல்மாடியிலாவதுபிரகாசிக்கலாம் என்றஆசைபோலும்! "நீங்கள் பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் கூலிகளைப்போல் வந்திருப்பது குறித்து வருந்துகிறேன்" என்றார். மில் தொழிலாளர்கள் என்று கூறியிருந்தாலும் மகிழலாம். மில்கூலிகள்என அவர்களை அவமதித்துவிட்டார்.

பக்கிங்ஹாம் கர்னாடிக் மில் கூலிகளில்லையேல்சென்னைமாகாணத்துணிப்பஞ்சம் அதிகரித்திருக்கும், இனியும்அதிகரிக்கும் என்று அவர் அறியமாட்டாரா? எத்தனைகோடி கெஜம்துணிநெய்யப்படுகிறது என்பதை மறந்துவிட்டாரா மந்திரி பிரகாசம்? பதவி கையில் இருக்கும்போது, பாட்டாளி மக்களை மனம் தூற்றத்தான் சொல்லும். தான் பிரதமர் என்ற அகந்தையின் காரணமாகத் துணிவு கொண்டார் போலும். அந்தக் 'கூலி'களையும், ஆசிரியர்களையும் ஒன்றுசேர்த்து இருதரத்தாருக்கும் அவமானத்தை உண்டுபண்ணிவிட்டார் பிரதமர். பெரியபதவியிலிருந்தாலும் பிறரைத் தூற்றுவதற்கு நா இடங்கொடுக்கக்கூடாது. பெரியசட்ட நிபுணராயிருந்தாலும் எதிர்க்கட்சியில் வாதாடும் வக்கீலைத் தூற்றிப் பேசுதல் நியாயமில்லையன்றோ?

கூலிகள் இல்லையேல்நாட்டில் தொழிலேது? ஆம்! பிரதமர் சொன்ன பக்கிங்காம் மில் கூலிகளால் ஒரு அளவு துணிப் பஞ்சம் குறைந்திருக்கிறது என்பதை அறிந்திருந்தாலும், பதவி மோகத்தில் மறந்திருப்பார் பிரகாசம். பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்லில் வேலை செய்யும்தொழிலாளர்களைக்கூலிகள் எனக்கூறினால், எண்சாண் உடம்பை மறைக்க எட்டுச்சாண் துணி கூடக்கிடைக்காது.

பிரதமர்பிரகாசம் தானே படித்துமுன்னுக்குவந்துவிட்டாரா? உயர்தரப்பள்ளியிலும்,கலாசாலையிலும், சட்டக்கலாசாலையிலும்தானேபடித்துவிட்டாரா? ஒருவருடைய உதவியும் இல்லாமலே முன்னுக்கு வந்துவிட்டாரா? கலாசாலையிலோ அல்லது பள்ளிகளிலோ ஆசிரியர்கள் போதிக்கவில்லையா? மாணவர்களை வருங்கால வீரர்களாக்கப் பாடுபட்டுக்கற்பிக்கும் ஆசிரியர்களைக்கூலிகள் என்று கூற அவருடைய மனம் எவ்வளவு கடினமானதாக இருக்கவேண்டும்?

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்பதை அறிந்திருக்கமாட்டாரோ? ஆம்! அறிந்திருக்கமாட்டார். ஆந்திர நாட்டைச்சேர்ந்த அவர் தமிழ் நாட்டரசனின் தனிப்பெருவாக்கை எப்படி அறிந்திருக்கமுடியும்!

தானும் ஒரு ஆசிரியனின்றிப் பற்பல சூழ்ச்சிகளுக்கிடையில் முன்னேறிப்,பிரதம மந்திரியாக வந்திருக்கமுடியுமா என்பதை அவர் யோசித்துப்பார்க்கட்டும்.

பொ[illegible] சர்க்கார் வரும், ஆசிரியர்கள், கிராம அதிகாரிகள், பாட்டாளி மக்களான தொழிலாளிகள்,இன்னும்உள்ள கீழ்த்தரசிப்பந்திகள்இவர்களனைவரும் முன்னுக்கு வரலாம், தபால்காரர்கள் சம்பளம் உயர்த்தப்படும்,ரயில்வேத்தொழிலாளர்களின் குறை நிவர்த்திக்கப்படும் என எதிர்பார்த்திருந்த மக்களின் ஆவல் அவிந்து போய்விட்டது. ஆசைக்கயிறு அறுந்துவிட்டது. அவர்களில் ஒருவருடைய சம்பளமாவது உயர்த்தப்பட்டுள்ளதா? இல்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரீவாத ஜரிகை!!

80, 100-ந. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.

இதற்குப்பேர் பக்தி நூலாம்!

(நக்கீரன்)

★

அப்பரோடு மறைக்காட்டில் இருந்த அவ்வூர்க் கோயிற்கதவு திறக்கவும் அடைக்கவுமானதிரு விளையாடலைப்புரிந்த சம்பந்தர், மதுரையிலிருந்து குலச்சிறையும் மங்கையர்க்கரசியும் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, மதுரையிலுள்ளசமணர்களோடு மதப்போர் தொடுத்து, அவர்களை வென்று சைவத்தை நிலைநாட்டுவதற்காகப் புறப்பட்டு மதுரைக்குப் போய்ச் சேருகிருர். அங்கே மறைக்காட்டினின்றும் சம்பந்தர் புறப்பட்டவுடனே, இங்கே மதுரையில் சமணர்கள் தீக்கனுக்கண்டனர்; குலச்சிறைக்கும் மங்கையர்க்கரசிக்கும் நன்னிமித்தங்கள் மேலும் மேலும் உண்டாயின. தீய கனவுகளைக் கண்டதாகக் கூறப்படும் சமணர்களை,

மாசுமேனி நீசர்
வஞ்சகப் புலையர்
மானமில்லாதவர்
பாவிகள்
பாதகர்
அமண் குண்டர்
உணர்விலா அமணர்
புன்தலைச் சமணர்
வெங்தொழில் அருகர்

என்று இன்னும் ஏதேதோ வாயினலும் உச்சரிப்பதற்குத் தகுதியற்ற கொடுஞ்சொற்களால் தம்வாய்கொண்ட மட்டும் திட்டிப் பாடியிருக்கிருர் சேக்கிழார். சேக்கிழார் சமணர்களைத் திட்டினுர் என்று நான் கூறும்போது சில சைவ'மெய்'யன்பர்களுக்கு என்மீது சீற்றம் எழலாம். "செந்தண்மை பூண்ட சேக்கிழார்—அன்புநெறி நின்று அமைச் சோச்சிய அண்ணல்—இத்தகைய இழிசொற்களாலா சமணர்களை இழித்துரைத்திருப்பார்? ஒருபோதும் இராது; இது பொய்" என்றும்கூறுவர். ஆனல், இத்தகையினர் சேக்கிழாரால் பாடப்பெற்றபெரியபுராணத்தை ஒரு முறையாவது பார்ப்பார்களானல், இங்கு எடுத்துக்காட்டிய இழிசொற்களைவிட இன்னும் மிகவும் கேவலமான இழிசொற்களால்திட்டியிருப்பதைக் காண்பர். பெரியபுராணத்தில், சமணர்களைப்பற்றிக் கூறுமிடங்களில் எல்லாம் மேற்சொன்னவைபோன்ற் இழி சொற்களை அடைமொழியாகக் கொள்ளாமல் சேக்கிழாரால் புராணம் பாட முடியவில்லை என்பதும் விளங்கும். இங்ஙனம் ஒருவரை இழிவாகப் பேசுவது தமிழர் மரபுக்கும்–பண்புக்கும்ஏற்றதா? இல்லை. அப்படியிருக்கச், சேக்கிழார் ஏன் இவ்வாறு, பெரிய புராணத்தை இழி சொற்களின் அகராதியாக ஆக்கினர்?

"இனியஉளவாக இன்னு
கூறல்
கனியிருப்பக் காய்
கவர்ந்தற்று"

என்பது தமிழர்பண்பு. தமிழ் மரபில் வந்த சேக்கிழாருக்கு இந்த நற்பண்பு தெரியாமற் போன காரணம் என்ன? ஒருவரை எந்த அளவுக்குஇழிவாகப் பேசவேண்டுமோ அந்த அளவுக்குப் பேசுவதற்குக் கூடப், பேசப்படுபவரின் மனம் புண்படாமல் இருக்கும் முறையில் பேசுவதற்குத் தமிழில் இனிய சொற்கள் இருக்கின்றன. இருந்தென்ன? சேக்கிழாருக்கு அச்சொற்கள் அகப்படவில்லைப் போலும்! கனியிருக்கக் காய் தின்பதுபோல, இனிய சொற்களைவிட்டு இடர்ச் சொற்களால் சமணர்களைத் திட்டியிருக்கிருர் சேக்கிழார். இதற்குக் காரணம் என்ன! சமணர்களிடம் சேக்கிழாருக்குப் பகையா? இல்லை. அவரிடம் குடிகொண்டிருந்த மாற்றமுடியாத சைவப்பற்றே சமணப் பெருமக்களை வாயில் வந்தவாறெல்லாம் தூற்றும்படி செய்தத. அன்புவழியில்லாமல், இயற்கைக்கு மாருனசமயவழி, சாத்திரவழி நிற்போர்க்கெல்லாம் இனிமையும் எளிமையும் தோன்றப் பேசுவதோ எழுதுவதோ முடியாத காரியங்களாகி விடுகின்றன. இதனலே தான், அறிவாராய்ச்சியிற் சிறந்துவிளங்குபவர்கள்கூட, மதமெனும் வலையில் சிக்கிவிடுவார்களானல், அவர்களும் மதத்தா(வெறியா)ல் மயங்கி மக்களுக்கு இனியவை செய்வதற்கு மாருக இன்னுதவையே செய்யவேண்டியவர்களாகி விடுகிருர்கள் என்றுகூற வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகின்றது.

இனிச், சேக்கிழாரின் வசை மொழிக்கு ஆளான சமணர்கள் எப்படிப்பட்டவர்கள்? இன்று தமிழ்மக்கள் ஓரளவு மானத்தோடும், அறிவோடும் வாழ முடிகிறதென்ருல், அது, சமணப் பெருமக்கள் செய்த—மறத்தற்கரிய பேருதவியினலேயாகும் என்பதை எவரேமறுக்க வல்லர்? ஆரியப் புராணக் குட்டையில் விழுந்து மீளமுடியாமல் தவிக்கும் தமிழ்மக்களுக்குச் சமணப்பெருமக்கள் இயற்றிய சங்க இலக்கியங்களே மரக்கலமாக நின்று, அறிவென்னும் கரைக்கு அவர்களை இழுத்துச் செல்லுகின்றன வென்பதை இல்லையென்று இயம்ப எவரே முன்வருவர்? இன்று நம்மிடையே காணப்படும் சங்க இலக்கியங்கள் அத்தனையும் சமணப்புலவர் பெருமக்களால்ஆக்கப்பட்டவை என்பதை யார் தான் மறுத்துக் கூறமுடியும்? இப்படிப்பட்ட மறக்கமுடியாத பெருநன்றியைச் செய்த பெருமக்களைத்தான் நமது செங்நெறிச் செல்வராம் சேக்கிழார் பெருமான் வஞ்சகர், நீசர், புலையர், மானமில்லாதவர், பாவிகள், பாதகர், உணர்விலார், புன்தலையர், வெங்தொழில் செய்வோர், குண்டர் என்பன போன்ற கொடிய சொற்களால் அழைக்கிருர்.

சமணர்கள் நமக்குத் தீங்கு பல செய்தனர் என்றே வைத்துக்கொண்டாலும், அவர்கள் நமக்குச் செய்த நன்மைக்காக அத்தீங்குகளை (இருந்தால்) மறக்கவேண்டிய தனரே தமிழர் தம் சீரியபண்பு,

"கொன்றன்ன இன்னு
செய்யினும் அவர் செய்த,
ஒன்றுநன்றுள்ளக்கெடும்"

என்பது தமிழர் மரபு. இதனல், தீமைசெய்கின்றவர்களைத் தமிழர் ஆதரிக்கவேண்டுமென்று பொருள்கொண்டுவிடப்படாது. மற்று, அவர்கள் செய்த நன்மையை மறக்கப்படா தென்பதே இதன் பொருளாகும். ஆனல், சேக்கிழார், சமணர்கள் செய்த நன்றியை மறக்காமல் இருப்பதற்கு அறிகுறியாகத் தாம்பாடிய பெரியபுராணத்தில் எங்காவது — ஓரிடத்திலாவது அவர்களைப் பாராட்டிப் பாடியிருக்கிருரா? இல்லவே இல்லை. பாராட்டாவிட்டால் போகிறது;

"குணம் நாடிக் குற்றமும்
நாடி அவற்றுள், மிகை
நாடி மிக்ககொளல்"

என்ற ஒழுங்கு முறையைப் பின்பற்றி; அவர்கள் (சமணர்கள்) செய்த குணத்தையும் குற்றத்தையுஞ் சீர் தூக்கிப்பார்த்து—எடைபோட்டுக், குணமோ அல்லது குற்றமோ இரண்டிலொன்று மிகுதியாக இருக்கிறது என்ருவது, எங்காவது ஒரு பாடலிலாவது குறிப்பிட்டிருக்கிருரா என்று அலசிஅலசிப் பார்த்தாலும் அகப்படவில்லையே! கடல் நீரை எங்கு மொண்டு பார்த்தாலும் அங்கெல்லாம் உப்புமயமாக இருப்பது போலப், பெரியபுராணத்தில் சமணர்களைப்பற்றி எங்கு பேசப்பட்டிருந்தாலும் அங்கெல்லாம் அவர்களை இழித்தும் பழித்தும் திட்டியுமன்ருேபேசப்பட்டிருக்கின்றத. மறந்தேனும் ஒரு சொல்கூட அவர்கள்செய்த நன்மைக்காக அவர்களைப் பாராட்டும் குறிப்பு இல்லையே! இப்படிப்பட்ட ஒரு நூலுக்குப், பெரியபுராணம் என்ற பெயரைப் பார்க்கிலும் சமணர் வசை புராணம் என்று பெயர்வைத்திருக்கலாமே! அல்லது தொண்டர் புராணம் என்றில்லாமல்சமணக்குண்டர்புராணம் என்ருவது பெயர் வைத்திருக்கலாமே! சமணர்களைக் 'குண்டர்கள்' என்று வாய்கூசாமல்—நன்றி மறந்த முறையில் திட்ட அதிகாரம் அளித்த அன்புவடிவான சிவன், அந்நூலுக்கு வசைபுராணமென்ருே குண்டர்புராணமென்ருே பெயர் சூட்டுவதைத் தடைசெய்திருக்கவேமாட்டார். உயிரைக்கொல்லும் நஞ்சுக்குச் சர்க்கரை பூசிப் புனிதம் கற்பிப்பது போல், குறிப்பிட்ட ஒருவரைத் திட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு எழுதப்பட்ட ஒருநூலுக்கு, அதனை மறைப்பதற்கு, அதற்குப்பக்தி நூல்என்றுபெயர்கொடுத்துமன்பதையை ஏய்க்க முடல்வதான் மூதறிவோர் செயலா? இத்தகைய அழுக்குப்படிந்த நூலை அனலில் இடவேண்டுமென்று கூறும் அறிஞர்களைக்கண்டு ஆயாசப்பட்டு ஆத்திரம் கொள்ளும் அன்பர்கள் நான்கூறிய கருத்துக்களை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறேன்.

இனிச், சம்பந்தரால் புகழ்ந்து போற்றப்பட்ட மங்கையர்க்கரசி என்னும் பாண்டியன்மனைவியைப் பற்றியும், குலச்சிறை என்னும் பாண்டியன் அமைச்சரைப்பற்றியும் சேக்கிழார் கூறியிருப்பனத எமது பெரியபுராண ஆராய்ச்சி நான்காம் பாகத்தில் விளக்கியுள்ளேன். அவர்களைப் பற்றிய வரலாறுகளை ஆங்குக் காண்க. இங்கு, மங்கையர்க்கரசியைப் பற்றிச் சேக்கிழார் கூறியிருக்கும் ஒரு குறிப்பை மட்டும் விளக்குகிறேன. அதாவது, சம்பந்தர் மதுரையை நோக்கிப் புறப்பட்டவுடனே மங்கையர்க்கரசியும் குலச்சிறையும் நன்னிமித்தம் கண்டார்கள் என்று கூறுமிடத்தில், சேக்கிழார், மங்கையர்க்கரசியாரின் பண்பாட்டினைவிளக்குகிருர்-எப்படி?

"பைவளர் அரவேரக்குல்
பாண்டி மாதேயார்க்கும்"

அதாவது, பாம்பின் படத்தைப்போன்ற அல்குலை உடைய மங்கையர்க்கரசியார் என்பது இதன் பொருள். இங்கே, கம்பருக்கு அண்ணனுகி விட்டார் சேக்கிழார். எங்ஙனம்? வால்மீகியால் பாடப்பட்ட இதிகாசத்தைக் கம்பர் ஒரு பக்திநூலாகப்பாடி அதிற் பேசப்படும் இராமன் என்னும் அயோத்தி மன்னனைக் கடவுளாக ஆக்கினர் என்றபோதிலும், அடிப்படையில் அதஒரு இதிகாசமேயன்றிப் பக்தி நூலன்று. ஆனல் பெரிய புராணம் அடிப்படையிலேயே ஒரு பக்திநூல். கம்பராமாயணம் எப்படி வால்மீகி இராமாயணத்தை முதல்நூலாகக்கொண்டு எழுதப்பட்டதோ, அதுபோலவேபெரியபுராணமும் உபமன்யுபக்த விலாசம் என்பதை முதல்நூலாகக்கொண்டு எழுதப்பட்ட போதிலும் உபமன்யு பக்தவிலாசமும் பெரிய புராணமும் பக்தியையே அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டவையாகும். ஆனல், வால்மீகிஇராமாயணம்பக்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதன்று. வால்மீகி, இராமருக்குக் கற்பிக்காதகடவுட்டன்மையைக் கம்பர்கற்பித்துஅதனை ஒரு பக்திநூலாக, வழிபாட்டுக்கு உரியதாக ஆக்கிவிட்டார்.

(5-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 15—9—46 [ஞாயிறு

தலைதூக்க முடியுமா?

★

இப்போது நடைபெறும்சர்க்கார் ஏகாதிபத்யச் சர்க்கார் அல்லவென்றும், மக்களின் சர்க்காரே நடைபெறுகிறதென்றும் சொல்லப்படும் இந்த நேரத்தில், மக்களின் சர்க்கார், மக்களுக்கு வேண்டிய அரசியல் பொருளாதார சமூக உரிமைகளைத் தாங்களாகவே தெரிந்து செய்வார்கள் என்று மக்கள் எதிர்பார்ப்பர். ஆனால், இன்று நடைபெறுவது மக்கள் சர்க்காரா அல்லது மக்கள் சர்க்காரை நடத்த வேண்டியவர்கள் ஏகாதிபத்யச் சர்க்காரை நடத்திக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா? என்பது மக்கள் சர்க்கார் என்று சொல்லப்படுபவர்கள் பதவியேற்ற இச்சிறுகாலத்துக்குள் அவர்கள் கையாண்ட முறைகளில் இருந்து விளங்கிவிட்டது

இந்த நிலையில், திராவிடர்களாகிய நாம், திராவிடநாடு தனிநாடாக ஏன் பிரிக்கப்படவேண்டும் என்பதற்குள்ள முக்கிய காரணங்களில் பொருளாதார பாதுகாப்பும் ஒன்று என்பதை பன்முறை விளக்கி வந்திருக்கிறோம். இந்தியா இப்பொழுது தான் தொழில் வளர்ச்சியில் இறங்கியிருக்கிறது. இயந்திரத் தொழில்நிலையங்கள் பலதோன்றுகின்றன. இந்தியாவின் பொருளாதாரநிலை இத்தொழில் நிலையங்களைப் பொறுத்துத்தானிருக்கப்போகிறது.

இந்த நிலையில், திராவிடநாடு தூங்கிக்கொண்டிருந்தால், மத்தியசர்க்காரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்துவந்தால், கடந்த 200 வருடங்களாகப்பிரிட்டன் இந்தியாவை எவ்வாறு சுரண்டிக்கொண்டு வந்ததோ அதுபோல இனிஒரு 200 வருடம்வடநாடு திராவிடநாட்டைச்சுரண்டிவரும். இதுவரை மதத்துறையில் ஆரியத்துக்கு அடிமையாயிருந்து வந்ததின் பயனாக, கோவில்களின் பேரால், மடங்களின் பேரால், உற்சவங்களின் பேரால் நம் நாட்டுப்பொருளாதாரத்தை கொள்ளைகொண்டு போகவும், நம் மக்கள் பஞ்சைகளாகி வெளிநாடுகளுக்கு பஞ்சாய்ப் பறக்கவும் ஆனநிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இனிப்பொருளாதாரத் துறையில் வடநாட்டானுக்கு—பிர்லாவுக்கும், டாட்டாவுக்கும், மோடிக்கும் அடிமையாய் விட்டால். அவர்களுடைய தொழில் நிலையங்கள் திராவிட நாட்டில் நிறுவப்பட்டுவிட்டால், அதற்கு இடங்கொடுத்துவிட்டால், திராவிடநாடு என்றாவது தலையெடுக்க முடியுமா? திராவிடமக்கள் இந்நாட்டில் வாழமுடியுமா? என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

29—9—45ல் திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக 17வது மாகாண மாநாட்டிலும் இந்தவிஷயம் நன்கு விளக்கிப் பேசப்பட்டது.

இன்றுதிராவிடநாட்டில் வடநாட்டார்கள் கட்டுப்பாடாகத், திட்டம்போட்டுக்கொண்டு, பத்திரிகைகள் ஒவ்வொன்றையும் விலைக்கு வாங்கி வருவதையும், தொழில்நிலையங்களை ஒவ்வொன்றாகவிலைக்குவாங்கி வருவதையும், அவர்களது மூலதனத்தை இங்கு கொண்டுவந்து கொட்டிவருவதையும், புதிதுபுதிதாகத்தொழில் நிலயங்கள் நிறுவிவருவதையும், இதற்கெல்லாம்சர்க்கார் அனுமதியளித்துவருவதையும் பார்த்தால் இதற்கு ஏதாவது ஒரு முடிவு தேடவேண்டாமா என்றுகேட்கிறோம். திராவிடநாடு தனிநாடாக பிரிக்கப்படாமல் ஒன்றாகஇருக்கும்வரை, பொருளாதாரத்துறையில் பாதுகாப்புஏற்படுத்தமுடியுமா? தடைவிதிக்க முடியுமா? என்பதையும் எண்ணிப்பாருங்கள்.

தொழில் நிலயங்கள் நிறுவுவதற்கு இயற்கையான வசதிகள் உள்ளதுதிராவிடநாடு.மூலப்பொருள்கிடைப்பதிலும்,போக்குவரவு சாதனத்திலும், வடநாட்டைவிடத்தென்னாட்டில்தான் வசதி அதிகம். முக்கியமாகமின்சாரவசதியும் கனிகளும் இங்குதான் அதிகம்.

ஆகவே,வடநாட்டுப்பனியாக்களும் குஜாராத்திகளும், பிர்லாக்களும் போட்டி போட்டுக்கொண்டுவருகிறார்கள் தொழில் நிலயங்களைநிறுவுவதற்கு.மத்தியசர்க்காரின் ஆதிக்கத்தின்கீழ், இந்நாடு இருந்துவரும்வரை,இத்தகைய காரியங்களைத்தடுக்கமுடியாது, துணிவும் ஏற்படாது. திராவிடமக்கள் இச்சமயத்தில் எக்கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் இம்முக்கியமான உயிரான பிரச்னையைக் கட்சிவேற்றுமைக் கண்கொண்டு பாராமல், திராவிடமக்களின்முன்னேற்றத்தைக்குறித்தும்; இன்றுதிராவிடமக்கள் வெளிநாடுகளில் எத்தகையபரிதாபகரமான நிலையிலிருந்துவருகிறார்கள் என்பதை மனதில்கொண்டும் சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வபாயத்திலிருந்து தப்புவதற்குவழி திராவிடநாடு தனிநாடாகப்பிரிக்கப்படுவதைத் தவிர, வேறொன்றுமில்லை யென்பதையும் நினைவூட்டுகிறோம்.

இந்தியாகடன்கொடுக்கிறது.

இந்திய சர்க்கார் சயாம் சர்க்காருக்கு ஐந்துகோடிரூபாய் கடன் கொடுத்திருக்கிறது.இந்தக் கடன் சம்பந்தமான ஒப்பந்தம் 1946- செப்டம்பர் 4- ம்தேதியன்று புதுடில்லியில் கையெழுத்தாயிற்று. இந்திய சர்க்கார்நிதி இலாகா, பிரதம காரியதரிசியின் காரியாலயத்தில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சி. இந்திய சர்க்காரின் சார்பில் பிரதம காரியதரிசி கையெழுத்திட்டார். சயாம் ராஜனின் நிரந்தரதலைவரான ஈயிஉறவிலாமின் சயாம் சர்க்காரின் சார்பில் கையெழுத்திட்டார்.

★ வெற்றி பெறவழி ★

(P. வேலாயுதம் குற்றலம்)

"என்னால்ஆகும்என எண்ணுவோனுக்கு எல்லாம் ஆகும்;நானசெய்தே முடிப்பேன்" என்று 1862ம் ஆண்டு அமெரிக்கா ஐக்கியமாகாணங்களின் தலைவர் ஆபிரகாம்லிங்கன்என்பவர் தமது தினசரிக் குறிப்புப்புத்தகத்தில் எழுதினர். 19ம் நூற்றாண்டில் அவர் செய்த வீரச்செயலுக்கு, மேற்சொல்லப்பட்ட வார்த்தைகள் பெரியவன்மையையும் ஊக்கத்தையும் அளித்தன. அடிமைகளுக்கு விடுதலையளிக்க அவர் முதலில் மனதில் எண்ணினர், தான் மனதில் எண்ணியதைச் செய்தே முடித்தார். அவர் தன் மனதிற்குள்செய்த தீர்மானமே அவரது ஆச்சரியகரமானஅரிய செயலுக்கு உறுதியளித்தது. அதையாரும் மறுக்கவியலாது. பிறரது ஏளனத்தையும் கண்டனத்தையும், எதிரிகளின் அச்சுறுத்தலையும், நண்பர்களின் கைவிடுதலையும் கவனியாது சரித்திரத்தில் கீர்த்திவாய்ந்த செயலை—அடிமைகளின் விடுதலையைச் செய்து நிறைவேற்றினர்.

இதற்குக் காரணம் என்ன? தன் நம்பிக்கையே. அடிமைத் தளையினின்று மக்களை விடுவிக்க, மக்கள் மக்களாய்வாழ, சுதந்திரம்பெற, சமத்துவம் தழைக்க விடுதலைகாணவீரமுடன் போராடியமேனாட்டுவீரர்களான,துருக்கிக்கமால், ரஷ்ய லெனின், பிரஞ்சு நெப்போலியன், சைனா சன்யாட்சன், முதலியோர்களுக்கு தன்நம்பிக்கையேபோராயுதமாக இருந்தது. அது அவர்களது பலத்தை பன்மடங்கு அதிகப்படுத்தியது. லூதர், உவெஸ்லி, கொலம்பஸ்,எடிசன் முதலிய கருமவீரர்களின்வெற்றிகளுக்கும்தன்நம்பிக்கையே காரணம் ஆகும்.இந்தத்தன்நம்பிக்கை, தன்பலத்தில் உறுதி, திடசித்தம் (Firm mind) முதலியவற்றை ஆயுதமாகக்கொண்டுதான் நாட்டுபுறத்து இளங்கன்னியாகிய ஆக்கியோஸன்னி என்னும் பெண்பிரான்சுப்படையைப்போர்களத்திற்கு நடத்திசென்று'ஆலியன்ஸ்' என்றஊரில் ஆங்கிலேயரோடு சண்டையிட்டு வெற்றியடைந்தாள். இந்தவித அபாரசக்தியை ஒரு பெண்ணிடங் கண்ட பிரஞ்சு மன்னர் அவள் சொற்படி நடந்தான். பிறகு அவள் படைவீரர்களைச் சிறுபிள்ளைகள்போல் ஆட்டிவைத்தாள்.

பெஞ்சமின்டிஸரேலி என்பவர் யூத வகுப்பைச்சேர்ந்தவர்.யூதர்கள் அக்காலத்தில் ஐரோப்பாவில் அதிககேவலமாக நடத்தப்பட்டார்கள். அவர் இங்கிலாந்து தேயத்தில் மிக்க கீர்த்திவாய்ந்த மந்திரியானர்; காரணம் என்ன? தன் பலத்தில் நம்பிக்கைதான். அவர் முதன் முதல் ஆங்கில பாராளுமன்றத்தில் பேசஎழுந்தபோழ்து எல்லோரும் கைதட்டி நகைத்தனர். அவர்சற்றும் தயங்காது "நான் பேசுவதை நீங்கள் கேட்கும் நாள் வரும்" எனக்கூறிப்போந்தார். தன்நம்பிக்கை என்ற ஆயுதத்தால் அவர் உயர்ந்து இங்கிலாந்துக்குப்பிரதம மந்திரியானர். அவரை எள்ளிய மனிதர்கள் இறைஞ்சிப்பணிந்தனர்.

ரூஸ்வெல்ட் என்றஅமெரிக்க தேசாதிபதியின் சித்திக்கு அவரதுதன்நம்பிக்கைதான் காரணம். அவர் தனது தன்நம்பிக்கைக்கு அளவுகடந்தமதிப்பைக்கொடுத்து வந்தார். ஆகவே அவர் கைக்கொண்ட காரியம் அனைத்தும்கைகூடின. நெப்போலியன் நெப்போலியனில் நம்பிக்கை வைத்ததுபோல ரூஸ்வெல்ட்ரூஸ்வெல்டில் நம்பிக்கை வைத்தார். பெயர் பெற்ற அந்த அதிபதியிடம் கோழைத்தனம் தலைகாட்டவேயில்லை. அவர் எதையும் அரைமனதோடு செய்ததில்லை; எந்தக்காரியத்தை மேற்கொண்டாலும் அது சித்தியுடன் முடியும்என்று ஏற்கனவே தம்முள் நம்பிக்கைகொண்டு அவர்செய்தபடியால் வேலை,தொடங்குமுன்னர் முடிந்தது எனச் சொல்லுமாறு யாவும் எளிதில் நடந்தன.

திடமனதுடைய ஒருமனிதன்முன் எந்தத்தடையும் எதிர்த்து நிற்பதில்லை. உலகமே அவனைக் கண்டு வழிவிலகி நிற்கும். ஆச்சரியப்படத்தக்கவிதமாய் அவன் வேலைசெய்தால் "தன்நம்பிக்கை" என்னும் ஆயுதம் தடைகளை அறுத்தெறிந்து விடும். ஆனல் "என்னால் முடியாது" என்று எவன் சொல்லுகிறானோ அவனால் உண்மையில் ஒன்றும் செய்யமுடியாதுதான். அவனைச் சீர்படுத்த எந்தத்தவஞானத்தாலும் முடியாது. ஆதையினற்றானன்றோ உலகம்போற்றும் நெப்போலியனும் (Impossible) என்னும் வார்த்தை தங்களது மொழியின் அகராதியிலுங்கூட இருக்கவேகூடாது என்றுஆங்கிலேயருடன் வாதாடினன். எனவே ஏளனத்தையும், கண்டனத்தையும், பழிச்சொல்லையும் இழிவையும் பொருட்படுத்தாது தன்னில்மட்டும் நம்பிக்கை வைத்துத் தன்வேலையைசெய்துவரும் ஒருவனைத் தோற்கடிக்க யாரால்முடியும்? வறுமை அவன் மனதைச் சிதைத்துவிடாது. துர்பாக்கியம் அவனைப்பின்வாங்கச் செய்யாது. துன்பம் அவன் கையேற்ற கருமத்தை கைவிடப்பண்ணாது.என்னவந்தாலும் எது நேரிட்டாலும் அவன் தன்முன்குறியாக வைத்துள்ளஇலக்கைத் (Aim) தொடர்ந்துமுன்னேறிச்செல்வான்.

ஆகவே,நீஉன்னைச்சுற்றித்தோல்வியால் வேலியிட்டுக்கொண்டு,சந்தேகம் தைரியஹீனம் முதலிய தோல்விச்சின்னங்களைப்பற்றியேஎண்ணிக்கொண்டுமிருந்தால் நீ கட்டாயம் தவறுவாய். அப்படிச்செய்யாதே. நிமிர்ந்துநில்; நேரேநோக்குதோல்விஎண்ணங்களைத் தகர்; தைரியமற்றநினைவுகளைத்தவிர்; அசாத்தியம் என்பதை அறவே அகற்று, நீ உன்முன்னே குறியாக வைத்த இலக்கைத்தொடர்ந்துதளராநெஞ்சத்துடனும், இடைவிடா ஊக்கத்தோடும் முன்னேறிச்செல்;அப்படியாயின் உனதுதடைகளைத்தகர்த்தெறிவாய். ஆனல் உன் மனதில் புதிய எண்ணங்களைக் குடிகளாக அமைக்கவேண்டும். உனக்கு முன்னால் காண்பதையும், நம்புவதையும் அடையுமாறு முயற்சிசெய். தடையின்றிப்பெறுவாய்.அது திண்ணம்.

இதற்குப்பேர்

3-ம் பக்கத் தொடர்ச்சி

எனவேதான், பக்தியில் முத்திப்போன கம்பரும் சேக்கிழாரும் ஒருவருக்கொருவர் போட்டியிடும் முறையில் பரவையர்தம் 'பரமர்கசியங்களை' எல்லாம் பரமனடியார்கள் கண்டு பரவசம் அடையும் வண்ணம் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியுள்ளனர் போலும்! எந்த ஒரு நூல் பக்திநூலாக ஆக்கப்பட்டாலும் அந்தநூல், பரவையர்தம் மறைவிடங்களை ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டுவதே மரபு; அங்ஙனம் செய்யாவிட்டால் அது பக்தி நூலாகாது என்பதையன்றோ கம்பராமாயணம் எடுத்துக்காட்டுகின்றது. இல்லையேல், வால்மீகி இராமாயணத்தில் காணப்படாத மறைவிட விளக்கங்கள் கம்பராமாயணத்தில் மலிந்து காணப்படுவானேன்? பெரும்பான்மை பக்தி நூல்களெல்லாம் பரவையர்க்கு இழுக்கு உண்டாக்கவேஎழுதப் பட்டதாகத் தெரிகிறது.

பெரியபுராணத்தில் பேசப்படும் மங்கையர்க்கரசி ஒரு தமிழ்ப்பெண். பெரியபுராணத்தைப் பாடியவரும் ஒரு தமிழ்மகன். என்றபோதிலும் மங்கையர்க்கரசியை ஒரு மாசுடையவளாகக் கருதும் முறையிலேயே சேக்கிழார் கதையின் போக்கை அமைத்திருக்கிறார். மங்கையர்க்கரசி தன்னுடைய கணவனுக்கு மாறுபட்ட நெறியில் நின்று ஒழுகினள் என்று சேக்கிழார் கூறுவதை நாம் குற்றமாகக் கொள்ளாவிட்டாலும், அவள் குலச்சிறையைத் தனது காவலனாகக்கொண்டிருந்தாள் என்று சேக்கிழார் கூறியிருப்பது உண்மையிலேயே தமிழ்ப் பெண்களுக்கு இழிவை உண்டாக்கும் ஒரு கொடுஞ் செயலாகும். குலச்சிறை என்பவர் மங்கையர்க்கரசியின் காவலனாக இருந்தார் என்பது,

"பாண்டமா தேவியார்
வான்பயிர்க்குவேலி"

என்று பெரியபுராண சாரம் என்ற பாடலில் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, ஒரு பயிருக்கு வேலி எப்படி இன்றியமையாததும் துணையுமோ, அது போலவே, குலச்சிறையும் மங்கையர்க்கரசிக்கு வேலிபோன்ற இன்றியமையாத் துணைவராக இருந்தார் என்பது இப்பாடலின் பொருளாகும். ஒரு இடத்தைச் சுற்றி வேலிபோடுவது அந்த இடத்திலுள்ள பொருள்கள் பிறரால் கவரப்படாமல் இருப்பதற்கும் அழிக்கப்படாமல் இருப்பதற்குமேயாகும். இங்கு மங்கையர்க்கரசியிடம் அவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டிய பொருள் என்ன இருந்தது? அவளுடைய கற்பு ஒன்றுதானே பாதுகாக்கப்பட வேண்டிய பொருள். மங்கையர்க்கரசிக்கு மட்டுமல்ல, கற்பையே தங்களின் அரியஉடைமையாகக்கருதும் பெண்கள் அனைவர்க்குமே அது பாதுகாக்கப்படவேண்டிய ஒருபொருள். அதுவும், பெண்கள் தங்கள் கற்பைத் தாங்களே பாதுகாக்க வேண்டும்—பாதுகாக்கமுடியுமேயொழிய, இன்னொருவர் (கணவனைத்தவிர) துணையாக நின்று அப்பண்பைக் காப்பாற்றவே முடியாது—அப்படிக் காப்பாற்றப் படுவதாகக்கூறுவதும்மாபெரும் தவறுடைத்தாகும். ஆனால் இங்கு பேசப்படும் மங்கையர்க்கரசிக்கு குலச்சிறை (அவளுடைய கணவனல்ல, அவளுடைய கணவனுக்கு அமைச்சன்) பாதுகாவலனாக இருந்தான் என்று சொல்லப் படுகிறது.

இனி, ஒருக்கால், மங்கையர்க்கரசி மற்றப் பெண்களைப்பார்க்கிலும் அழகிற் சிறந்தவளாய் இருந்த காரணம்பற்றி, அவளைப் பிறர் கவர்ந்து செல்லாமல்இருப்பதற்காக அவள் கணவனாகிய நெடுமாறன் தனது அமைச்சனாகிய குலச்சிறையை அவளுக்குக் காவலாக இருக்கும்படி செய்தான் என்று கொள்வதும் தமிழர் நெறிக்கு மாறுபட்ட செயலாகும். ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணைக் காவலாக வைக்கும் வழக்கம் ஆரியருடையதேயன்றித் தமிழருடையதன்று. இவ்வுண்மை, ஆரிய குலத்தவனான இராமன் தனது மனைவியான சீதைக்குப் பாதுகாவலனாகஇருக்குமாறு தனது தம்பி இலக்குவனை ஏவியதாலும், தமிழ் மரபினனான இராவணன், தன்னால் தூக்கிச் செல்லப்பட்டதாகச் சொல்லப்படும் சீதைக்குப்பாதுகாவலராக இருக்குமாறு திரிசடை (விபீடணன் புதல்வி) போன்ற பெண்களையே ஏற்படுத்தியதாலும் நன்கு புலப்படும். இக்காலத்திலுங் கூடப் பெண்களுக்குப் பெண்களும் ஆண்களுக்குஆண்களுமேதுணையாக இருத்தல் கண்கூடு. ஒரு பெண் திருமணம் செய்துகொண்டபின், அவளுக்குஅவள் கணவனே பாதுகாவலனாகவும் துணைவனாகவும் இருப்பதும்,திருமணமாகாத ஒரு பெண்ணுக்குப் பெண்களே துணையாகவும் பாதுகாவலாகவும் இருப்பது நம்மவரின் வழக்கமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் இங்கு பேசப்படும் மங்கையர்க்கரசிக்கு, அதிலும் அவள்கணவன் இருக்கும் போதே, அவளுக்கு உறவினன்கூட அல்லாத குலச்சிறை என்பான்பாதுகாவலனாக இருந்தான் என்று ஒருதமிழ்மகனை சேக்கிழாரால் கூறப்படுகிறதென்றால், அது மன்னிக்கப்பட முடியாத ஒரு பெருங்குற்றம் என்பது மட்டுமல்ல, தமிழர் மரபுக்கே இழிவைஉண்டாக்கும் செயலுமாகும்.

இனி, "இராமர் தன்னுடைய மனைவி சீதைக்குப் பாதுகாவலனாகத் தம்பி இலக்குவனைவைத்தது எப்படிக் குற்றமாகும்? வேறு பெண்களின் துணையின்றிக் காட்டில், தனியாக இருந்த சீதைக்கு, இராமர் வெளியே செல்லும் போது, தன்னுடைய மனைவிக்குத் துணையாக வேறு யாரை வைத்திருக்க முடியும்? இதனை ஒரு குற்றமாக எடுத்துக்காட்டி, இராவணன் சீதைக்குப் பெண்களையே துணைவைத்தான், இராமன் ஏன் ஒரு ஆணைத் துணைவைத்தான் என்று கேட்கலாமா?" என்பதாகச் சிலஇராம பக்தர்கள் வினவக்கூடும். உண்மைதான்; நாமும் அதனை ஒப்புக்கொள்ளுகிறோம். இராவணனுக்குப் பெண்களைத் துணை வைக்கக்கூடிய வசதிஇருந்தது. ஆனால், இராமனுக்கு அத்தகைய வசதி இருந்ததில்லை; எனவே தன்னுடைய தம்பியைத் துணை வைத்தான். அது குற்றமாகாது என்று கூறுவார்க்கு ஒன்றுகூற விரும்புகிறேன். அதாவது, கைகேயிதன் மகன் பரதனுக்கு முடிசூட்டுவதற்காக இராமனைக் காடேகும்படி தசரதனால் கட்டளையிடச் செய்கிறாள். இராமர் காட்டுக்குப் போகிறார். இதை அறிந்த சீதை தானும் கூடவருகிறேன் என்கிறாள். அழைத்துச்செல்கிறார். இவர்களுடன் இராமன் தம்பி இலக்குவனும் கூடச் செல்கிறான். சீதையையும் இலக்குவனையும் காடேகும்படி தசரதன் கட்டளையிட வில்லை. இராமரை மட்டுமே காடேகக் கட்டளையிட்டான். ஆனால், கணவனைப்பிரிந்து தனியே இருக்க மனம் ஒப்பாமையால் சீதையும், அண்ணனைப்பிரிந்து தனியே இருக்க இயலாததம்பியும், 'நாங்களும் தங்களுடன் வருகின்றோம்; தாங்கள் காட்டில் கலங்கி வாழ்வது, நாங்கள் நாட்டில் நலமாக வாழ்வதா? ஒருபோதும்கூடாது; நாங்களும் உடன் வருகின்றோம்' என்றனர். இராமரும் அதற்கு உடன்பட்டு அவர்களையும் தன்னுடன் அழைத்துச் செல்கிறார். அப்படிச்சென்றவர் ஒன்றை மறந்துவிட்டார். எதை? இராமர் சீதையைநோக்கி, "பெண்ணே! நானோ காட்டுக்குப் போகிறேன். அங்கு மக்கள் நடமாட்டமே இராது. நீ தனியாக வந்தால் அல்லற்பட நேரிடும்; ஆகையால் உனக்குத்துணையாக இரண்டொரு பெண்களையாவது உன்னுடன் அழைத்துவா; காட்டில் வாழப்போகும் நான் என்னுடைய உணவின் பொருட்டுக் காய்கனி தேடிச்சுற்றி அலைவேன்; அப்போதெல்லாம் நீ என்னுடன் வரமுடியுமா? அப்படியொருக்கால் என்னுடைய துன்பத்தில் நீயும் சரிபங்கு கொள்வதே காதலர் இருவர் ஒருமித்து வாழ்கிறார்கள் என்பதற்கு அறிகுறி என்றமுறையில் நீ நடந்து கொள்வதானாலும், பெண்கள் தனியாகவே செல்லவேண்டிய இருவித இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் பெண்களேயன்றி நான் (கணவனாக இருந்தபோதிலும்) உடன்வந்து கூடஇருப்பது முறையாகாது; காட்டில்அதிலும் இராக்காலத்தில் நீ உன்னுடைய இயற்கை நிகழ்ச்சிகளுக்காக ஒதுங்கும் சமயத்தில், உனக்குத்

(அடுத்த பக்கம் பார்க்க)

இராமாயணத்திலுள்ள

1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த வீர ஆண்மையால் உண்டாயின. அதன் பலன் அன்னியரால் உதையும் குத்தும்பட்டு, ஆணும் பெண்ணும் அங்குமிங்கும் ஓடி, இராமா, அரங்கா, கோவிந்தா என்று கூப்பாடு போட்டுக் கட்டி அழுவதற்கு வீர ஆண்மை வந்ததே யல்லாமல், மனிதனுக்கு மனிதன் சமமாக நிற்கும் வீரம் வரவில்லை. கம்ப இராமாயணம் இராமனைத் தெய்வமாக்கவும் பிராமணர்களை உயர்விக்கவுமே தோன்றியது.

இனி இரண்டாவது வீரம் இராட்சதர்களுடையதைப் பார்ப்போம். மகாவிஷ்ணுவின் காவலாளிகளான விஜயன், ஜெயன் என்கிற துவார பாலகர்களின் அவதாரம் இராவணன், கும்பகர்ணன் என்போர். இராவணனுக்குப் பத்துத்தலை, இருபது கை. அநேக காலம் தவஞ் செய்து பல வரங்கள் பெற்றவன். சாகாமலிருக்க அமிர்த கலசம் விழுங்கினவன். திக்குக் கஜங்களைக் கொன்று அவற்றின் கொம்புகளை ஒடித்து அவைகளில் இரத்தினங்களைப் பதித்து மார்பில் ஆபரணமாகப் பூண்டவன். சிவபெருமானின் உறைவிடமான கைலயங்கிரியைத் தூக்கினவன். மூன்றரைக் கோடி வயதில் ஐம்பது இலட்ச வருடம் வாழ்ந்தவன். பிரம்மாவின் பேரப்பிள்ளை. கும்பகர்ணனும் பிரம்மாவின் பேரப்பிள்ளையே. பெருத்த தேகம், தோள் ஆயிரக்கணக்கான யோசனை தூரமுடையது. ஆறு மாதம் தூங்குவான். ஆறு மாதம் விழித்திருப்பான். அவனுக்கும் அனுமனுக்கும் நடந்த சண்டையில் அனுமன் தோற்றபோது ஆதிமூல இராமனின் கோதண்டமே அவனைக் கொல்ல வேண்டும் என்று அவனுடைய பலத்தைப் புகழ்ந்திருக்கிறான். பிரம்மாவின் பேரப் பிள்ளைகளும், பருத்த தேகமுடையவர்களும், பெருத்த தவஞ் செய்தவர்களுமான அவர்களுடைய வீரம் நமக்கு வருமா? அதன் அர்த்தம்தான் தெரியுமா? இராமாயணத்தில் இராமருடைய வீர ஆண்மையைப் பற்றிப் பண்டிதன் கூறுகையில் கை எடுத்துக் கும்பிடவும், கன்னத்தில் போட்டுக் கொள்ளவுமே செய்வார்கள். தெய்வ பக்தியாகவே முடியும். இராட்சதர்களின் வீர ஆண்மை காணுமிடத்திலெல்லாம் துஷ்டர்கள், பாவிகள், செய்யும் செய்கை என்றுதான் முடிப்பார்கள். ஒரு வீர ஆண்மை பய பக்திக்கும், ஒரு வீர ஆண்மை கொடுஞ் செயல்களுக்கும். ஏற்படுத்தி விட்ட பிறகு, பின் இராமாயணத்தில், எந்த-வெப்படிப்பட்ட வீர ஆண்மை இருக்கிறது? ஒன்றுமில்லை, அடுத்த வியாசத்தில் குரங்குகளுடையவும், பிராமணச் சாபத்தின் வீர ஆண்மைகளையுஞ் சொல்கிறேன்.

இதற்குப்பேர்

5-ம் பக்கத் தொடர்ச்சி

துணையாக இருப்பதற்காவதுஒரு பெண்பாலைஉன்னுடன் அழைத்துவா" என்றுசொல்லியிருக்கலாம். இங்ஙனம் ஒரு பெண்ணைச்சீதை தனக்குத்துணையாக அழைத்துச் செல்லவிரும்பி இருந்தால், அதனைத்தசரதனே அன்றிக்கைகேயியோ ஒருபோதும் தடுத்திருக்க மாட்டார்கள். அப்படித் தடுக்கும் மனப்பான்மை அவர்களிடம் இருந்திருந்தால் இராமனைத்தவிர மற்றெவரையும் அவருடன்செல்லவிட்டிருக்க மாட்டார்கள். ஒருக்கால்,சீதைஇராமனுடைய மனைவியாகையால், அவளை அவருடன் செல்லவிட்டாலும், இலக்குவன் இராமருடன் செல்வதைத் தடுத்திருப்பார்கள். ஆனல் அவர்கள் அங்ஙனம் செய்யவில்லை.

இனி இராமருக்குக்காடேகும் கட்டளை தசரதனல் பிறப்பிக்கப்பட்டதும், அவருடைய மனம் ஒருநிலையில் நில்லாது தடுமாறியிருந்தது; தன்னுடன் யார்யார் வருகின்றுர்கள் என்ற நினைப்பே அவருக்குஇருந்ததில்லை.எனவே, தன்னுடன் வரும் சீதைக்குத் துணையாக யாராவது பெண்கள் கூட வருகின்றனராஎன்பதைக் கூட அவரால் கவனிக்கமுடியவில்லை' என்று கொள்வதற்கும் இல்லையே. அவர்நல்லமனஉறுதியுடன் இருந்ததாகவே தெரிகிறது. நானும் உம்முடன் காட்டுக்கு வருகிறேன் என்று சீதை கூறியதற்கு, இராமர், 'நீ என்னுடன்காட்டுக்கு வருவதானல், உன்னிடமுள்ள உடைமைகள் அனைத்தையும் பார்ப்பனர்க்குத் தானமாக வழங்கிவிட்டுவா' என்று கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும்,யாருக்காவது இல்லாதவர்களுக்குஉன்னுடைய பொருள்களைத் தானம் கொடு என்று சொல்லாமல்,ஒரு இனத்தைமட்டும் குறிப்பிட்டு அவர்களுக்கே உன்னுடைய உடைமைகள் எல்லாவற்றையும் கொடு என்று கட்டளையிடக் கூடிய 'தெளிவோடு' இருந்த இராமருக்குத் தன்னுடையமனைவிக்குத்துணையாக ஒருபெண்ணை அழைத்து வரும்படிசொல்வதற்குரிய தெளிவும் யோசனையும் இருந்ததில்லை என்று கூறுவதற்கும் இல்லை. எனவே, இராமபக்தர்கள் இந்தக்குற்றத்தை என் மீது.சுமத்தமாட்டார்கள் என்பது ஒருதலை. இதுகிடக்க;

இனி, மங்கையர்க்கரசியின் கணவனை நெடுமாறன்,தனது மனைவிக்குப் பாதுகாவலனக இருக்குமாறு தனது அமைச்சனை ஏற்படுத்தினன் என்று கொள்வது எக்காரணத்தைக் கொண்டும் ஒப்புக்கொள்ளமுடியாததாகும். எப்படி யென்றால், இப்பாண்டி மன்னன் ஒருஉண்மைத்தமிழனக இருந்தான் என்பதும், அதனலேயே அவன், தமிழர் நெறிக்குப்புறம்பான சைவசமயத்தை வெறுத்து, மக்களுக்கு அறிவையும் ஆற்றலையும் ஆண்மையையும் உண்டாக்கும் அரும்பெரும்நூல்களை இயற்றிய சமணர்கள்கொண்ட சமயத்தையே தழுவியிருந்தான் என்பதும், இம்மன்னன் மனைவி மங்கையர்க்கரசியும் இவன் அமைச்சன் குலச்சிறையும் இம்மன்னனுக்கு மாருக இருந்து சைவத்தைப்பாதுகாத்துச்சமணர்களைக் கழுவில் ஏற்றினர் என்பதும் பெரியபுராணத்திலேயேகாணப்படுவதால், இம்மன்னன் இவ் வேற்பாட்டை ஒருபோதும் செய்திருக்கவேமாட்டான் என்பது இதனல் நன்கு தெளிவாகின்றது.

இனி,இம்மங்கையர்க்கரசிஎன்பாள்தன்னுடைய கணவனுக்கு மாறுபட்டநெறியில்நின்றுஒழுக்கம் தவறி நடந்தவள் என்பதற்குப் பெரியபுராணத்திலேயே மறுக்கமுடியாத ஒரு சான்று காணப்படுகின்றது. அதாவது, மதுரைக்குச், சம்பந்தர் வந்துவிட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் மங்கையர்க்கரசியும் குலச்சிறையும் அவரை வறவேற்பதற்காகச் சென்றபொழுது, மங்கையர்க்கரசியார் சம்பந்தரைப் பார்க்க அஞ்சி ஒருபுறமாக ஒதுங்கி நின்றுள் என்றுசொல்லப்பட்டிருக்கிறது. இதனைச் சேக்கிழார்,

> 'எதிர்செலாதொருமருங்கு
> ஒதுங்கும்'

என்ற சொற்றொடர்களால் விளக்கியுள்ளார். தனக்குக் குருவாகக்கொண்ட சம்பந்தரை, மங்கையர்க்கரசியார் எதிர்சென்று வணங்காமல் அச்சமும் கூச்சமும் உடையவளாகஎதிரே செல்ல அஞ்சி ஒருபுறம் ஒதுங்கி நிற்கக்காரணம் என்ன? சம்பந்தரோ ஆண்டில் சிறியர்–பாலகன் (புராணப்படி) மங்கையர்க்கரசியோ ஆண்டில் முதியவள்–சம்பந்தருக்குத் தாய் என்று சொல்லக்கூடியவயதினள். அப்படியிருந்தும் தன்னுடைய குருவும், தனக்குத்தனயன் போன்ற வருமான சம்பந்தரைக்காண அச்சப்பட்டு ஒருபுறம் ஒதுங்கி நிற்கின்றுள்! ஏன்? அவளுடைய உள்ளம் தூய்மையுடையதாய் இருக்கவில்லை என்பதையே இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது. மங்கையர்க்கரசியின் உள்ளம் கள்ளங்கவடற்ற தூய்மையோடு கூடியதாய் இருக்கவில்லை; அவளுடைய ஒழுக்கம் நெற் தவறியே இருந்தது என்பதற்குஇன்னும்ஒருசான்றுபெரிய புராணத்திலேயே காணப்படுகின்றது. அதாவது, சம்பந்தரை எதிர்கொண்டு அழைப்பதற்காகப்புறப்பட்ட மங்கையர்க்கரசி, தான்இன்ன இடத்திற்கு இன்ன காரியத்திற்காகப் போகிறேன் என்று கூறவில்லை. வேறுஎன்ன கூறினள் அந்த 'மங்கை நல்லாள்.' நம் நாட்டில் சிலபெண்கள் இருக்கிறார்கள்; அவர்கள் எங்காவது ஒருசொந்த வேலையாகப் போகவேண்டுமென்று நினைத்தார்களானல் (வேலை என்றால், அதில் பலவிதம் உண்டு; சில பிறர்க்குச் சொல்லக்கூடியன; சில சொல்லக்கூடாதன) தாங்கள் போகவேண்டிய இடத்தையும், அங்குபோய் முடிக்கக்கூடிய காரியத்தையும் வீட்டிலுள்ளார்க்குச் சொல்லிப் போவதில்லை (எப்படிச்சொல்ல முடியும்)' அக்காவீட்டுக்கோ தங்கைவீட்டுக்கோ குளத்தங்கரைக்கோ போவதாகவேசொல்லிப்போவது வழக்கம். அதிலும் அவர்கள்போகவேண்டியதிசை வடக்காய் இருந்தாலும், வீட்டிலே கிழக்குப்பக்கம் போவதாகக்கூறியிருந்தால், வீட்டார் ஒருக்கால் பார்த்துவிட்டால் என்னசெய்வதென்ற அச்சங்கலந்த ஐயத்தோடு சிறிது தொலைவு கிழக்குப்பக்கமாகவே போய்ப்பின்னர், தாங்கள் போக வேண்டிய இடமாகிய வடக்குப் பக்கம் போவார்கள். அது போலவேதான், இந்தஅம்மையாரும், தான் சம்பந்தரைப் பார்க்கப் போவதாகத் தன்கணவனிடம் சொல்லாமல், கோயிலுக்குப் போவதாகச்சொல்லிப் புறப்பட்டுத் தான் போகவேண்டிய இடமாகிய சம்பந்தர் வரும் திசையை நோக்கித் தனது காவலன் குலச்சிறையுடன் போனதாகச் சொல்லப் படுகின்றது. இதனைச் சேக்கிழார்,

> "அம்புய மலராள் போல்வார்
> ஆலவாய் அமர்ந்தார் தம்மைக்,
> கும்பிடவேண்டும்என்றுகொற்ற
> வன் தனக்குக்கூறி......"

என்ற பாடலால்விளக்கியுள்ளார். எனவே மங்கையர்க்கரசியாம் மாதுநல்லாள், தான் போகவேண்டிய இடத்தையும், அங்கு இன்னகாரியத்திற்காகப் போகிறேன் என்ற உண்மையையும் தன்கணவனிடம் கூருமல், சிறுமதியுடைய பெண்கள் தங்கள் நடத்தையை மறைப்பதற்காகப் பொய் சொல்வது போல், மங்கையரில் சிறந்தவளாகச் சேக்கிழாராலும் சம்பந்தராலும் சிறப்பித்துப் பாடப்பெற்ற இந்த அம்மையாரும், தான் கோயிலுக்குப் போவதாகக் கணவனிடம் பொய்சொல்லிப் போகவேண்டிய காரணம் என்ன? இது, அம் மங்கையிடம் இருந்தகள்ளஉள்ளத்தையன்றே கண்ணாடிபோல் காட்டுகின்றது.

கணவன் மனைவியர்க்கிடையே கொள்கை வேறுபாடு இருப்பினும், அதை மறைக்காமல் வெளிப்படையாய் நடந்து கொள்பவர்களே உண்மையான காதலர் என்பது தமிழர் மரபு. இன்றுங்கூட ஈழநாட்டில் பலகுடும்பங்கள் கொள்கையில் வேறுபட்டவர்களாய் — ஆனல் அதை அவர்கள் மறைக்காமல் நடந்துகொள்வதைப் பார்த்திருக்கிறேன். அதாவது யாழ்ப்பாணத்திலுள்ள சிலகுடும்பங்களில் கணவன் கிறித்தவனகவும் சூசையப்பரை வணங்குபவனகவும், மனைவி சைவத்தைச் சார்ந்தவளாகவும் சுப்பிரமணியரை வழிபடுபவளாகவும் இருக்கின்றனர். இப்படி இருந்த போதிலும், இவர்கள் தங்கள் கொள்கைகளை ஒருவருக்கொருவர் மறைத்துப் பேசுவதோ நடப்பதோ கிடையாது. சுப்பிரமணியர் கோயிலுக்குப் போகின்ற வள்ளியம்மை, சூசையப்பர் கோயிலுக்குப்போகின்ற சுவாம்பிள்ளையிடம் தான் சுப்பிரமணியர் கோயிலுக்குப் போவதைக் கணவனிடம் மறைத்துப் பொய் பேசிப் போவதும் இல்லை. இப்படி இவர்கள் ஒருவருக்கொருவர் கொள்கையில் வேறுபட்டிருப்பதால், அவர்களுக்கிடையே சச்சரவோசலிப்போ கருத்துவேறுபாடோ உண்டாவதும் இல்லை. இன்னும் விளக்கமாகக் கூற வேண்டுமானல், "நான் வழிபடும் கடவுள் தான் உண்மையானவர்—உயர்ந்தவர், நீ வழிபடும் கடவுள் பொய்யானவர்—தாழ்ந்தவர்" என்ற உரையாடல் (தர்க்கம்) கூட அவர்களுக்குள் ஏற்படுவதில்லை.

ஆனல் இங்கு பேசப்படும் மங்கையர்க்கரசியோ, தன்னுடைய கொள்கையைத தன் கணவனிடம் கூடச் சொல்லாமல் மறைத்துவைக்கவேண்டியவளாக இருந்திருக்கிருள். என் இந்த நிலை ஏற்பட்டது? மங்கையர்க்கரசிக்கு உண்மையாகவே சைவசமயப்பற்று இருந்திருக்குமானல், அதை, அவள்,தன்னுடைய கணவனிடம் மறைத்துக் கூறியிருக்கவேண்டியதேயில்லை, அவன் தன்னுடைய கணவனை நோக்கி, "என் அன்பிற்குரிய காதலரே! எனக்குச் சைவசமயத்தில் தான் நம்பிக்கை இருக்கிறது; இப்போதுசைவமய ஆசிரியரான திருஞானசம்பந்தப் பெருந்தகையார்மதுரைக்கு எழுந்தருளுகிறார்; அவரைக் கண்டு வணங்கச் செல்கிறேன்"என்று உண்மையைக் கூறியிருக்கலாம். நெடுமாறன் பிறருடைய உள்ளத்தைப் புண்படுத்தி நடக்கும் உலுத்தகுணம் படைத்தவனல்லவென்பது அவனுடைய வரலாற்றால் நன்கு புலனகின்றது. இன்னும் விளக்கமாகக் கூற வேண்டுமானல், மங்கையர்க்கரசிக்கு உண்மையாகவே தன்னுடைய கணவனிடத்தில் அன்பும் சைவத்தில் பற்றும் இருந்திருந்தால், சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்துச் சமணர்களோடு மதப்போர் தொடுக்கும் ஏற்பாட்டைக் குலச்சிறையுடன் சேர்ந்து செய்வதற்கு முன்னரே, தன்னுடைய கணவனேடு கலந்துபேசி அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்வதையே தூயஉள்ளம் படைத்த ஒருபெண் தன்னுடைய கணவனுக்கு, தான் செய்யும் எந்தக் காரியத்தையும் மறைக்காமல்—வெளிப்படையாகச் செய்கிருள், எனவே அவளிடம் கள்ளம் இல்லை—கவடுஇல்லை—சூதில்லை— சூழ்ச்சிஇல்லை என்று கருதமுடியும், அங்ஙனமன்றித் தான் செய்கின்ற காரியங்கள் தன்னுடைய கணவனுக்குத் தெரியாமல் செய்யப்படுமானல், அத்தகையினளை நெறிதவரு ஒழுக்கம் பூண்டவள் என்ற எப்படிக் கூறமுடியும்?

இவ்வரலாற்றில் பேசப்படும் மங்கைபர்க்கரசியார், ஒரு தமிழ்ப்பெண் என்பதையும் மறந்து, புராணம் பாடிய சேக்கிழார், தாம் ஒருதமிழ் மகனக இருந்தும், தமிழர்க்குப் புறம்பான சமயத்தைத் தமிழ் நாட்டில் பரப்புவதற்காகப் புராணம் பாடியதோடு நில்லாமல், பெண்களை இழிவுபடுத்தும் முறையில் கதைகளை அமைத்தது, பொறுத்திடுதற்கரியஒரு பெருங் குற்றமாகும்.

எனவே, பெரியபுராண ஆராய்ச்சியின் ஒரு பகுதியான இக்கட்டுரை, பக்திக்காக எழுதப்படும் நூல்கள் எல்லாம், உண்மையிலேயே மக்களின் ஒழுக்கத்தைக் கெடுப்பனவாகவும், அதிலும் பெண்பாலாரைப் பெரிதும் இழிவு படுத்துவனவாகவும் இருக்கின்றன வென்பதையும், கம்பரும் சேக்கிழாரும் இந்தக் காரியத்தைத் திறம்படச் செய்திருக்கின்றனர் என்பதையும்எடுத்துக்காட்டவும்இத்தகைய நூல்கள் மக்களை நெறிதவறி நடக்கச் செய்பவையாய் இருக்கின்றன வென்பதை விளக்கவுமே எழுதப்பட்டதாகும்.

2-ம்பக்கத் தொடர்ச்சி

சொன்னேம்

(5)

மாகாண சுயாட்சி ஏற்பட்ட பிறகு, மாகாண மக்களுக்கு மாகாணப்பற்று ஓங்கிவளர்ந்து வருகிறது. ஒவ்வொரு மாகாணத்தாரும் தமது மாகாணம் தமதேஎன உரிமைகொண்டாட முன்வருகின்றனர். அதுதவறுமாகாது.பாஷாவாரிமாகாணப்பிரிவினையை ஆதாரமாகக்கொண்டு ஆந்திரர் தெலுங்கு நாட்டைத் தனிமாகாணமாகப் பிரிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகின்றனர். இந்நிலையில் தமிழ்நாடு தமிழருக்கே எனத் தமிழர் உரிமை பாராட்டுவதும் கிளர்ச்சி செய்வதும் எங்ஙனம் குற்றமாகும்?

"விடுதலை" 17–1–39

(6)

கடந்த நூறு வருடகாலமாக பிரிட்டிஷார் துப்பாக்கி முனையைக் காட்டிக்கொண்டிருககும் காரணத்தினுல் தான்'இந்தியா' வை ஒரு தேசமென்றும், இங்குள்ளவர்களை 'இந்தியர்' என்ற ஒரு நேஷன் என்றும்கூறும்படி நிர்ப்பந்தம்ஏற்படுத்தப்பட்டது. ஜாதி,மொழி, பிறப்பிடம், மதம், கலைாசரிகம்ஆகியவைகள்தான் சாதாரணமாக ஒரு நேஷனுக்கு இலட்சணங்களாகக் கூறப்பட்டுள்ளன.

"விடுதலை" 28–3–40

(7)

பிரிவினைத் திட்டத்தால் ஏற்படக்கூடிய நன்மைகளில் மிக முக்கியமானது, வடமேற்கெல்லைப் புறத்தகராறு தீர்ந்து விடுவதேயாகும். சுமார் 53-ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய சர்க்கார் பஞ்சாப் சர்க்காருக்கு வரைந்துள்ள கடிதமொன்றில், "வடமேற்கெல்லைப்புற மக்களை இந்திய பாதுகாப்பை முன்னிட்டு ஒன்றுபடுத்தவேண்டிய காலம் வந்து விட்டது" எனக் குறிப்பிடப்பட்டது. இப்போது அது பூரணமாக அமுல்நடத்தப்படப் பாகிஸ்தான் திட்டம் பெரும் சௌகரியமாக இருக்கிறது.

"விடுதலை" 13–8–40

இடுக்கியிலே சிக்கியுள்ள இனங்கள், தத்தமது உரிமையைப் பெறத்தனியரசு அமைத்துக். கொள்வதையே விடுதலை மார்க்கமாகக்கொண்டுதீரும்.

"திராவிடநாடு" 3–12–44

(8)

பிரிட்டிஷ் துப்பாக்கி முனை ஒன்று தான் "இந்தியா" என்பது ஒரு தேசம் என்ற போலி ஒற்றுமையைப் பிறர் நம்பும்படி செய்துவைக்கிறது.

"விடுதலை" 26–3–40

சொல்கிறுர்கள்

(5)

சுமார் நூறுண்டுகளுக்கு மேலாக நாமாக வளர்த்துக் கொண்ட தேசியமும் அதேகதியைத்தான் அடைந்துள்ளதென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். வடக்கே வங்காளத்திலோ, தெற்கே ஆந்திரநாட்டிலோ இன உணர்ச்சியும் தனி நாட்டுப்பற்றும் இல்லாத தேசபக்த வங்காளியையோ ஆந்திரரையோ நாம் பார்க்கமுடியாது. பல்வேறு சமயங்களில் அவர்களது இனவுணர்ச்சியானது தேசிய உணர்ச்சியையும் மிஞ்சி நின்றதை நாம் பார்த்திருக்கிறோம். சமீபகாலமாகத், தமிழ் மக்களாகிய நாம் அதன்பயனை அனுபவித்தும்வருகிறோம். இதற்குக் காரணம் என்ன? இந்த இனப்பற்று அழிக்க முடியாத ஒன்று என்பதேயாகும். உண்மையில் அது அழிக்கவேண்டிய அவசியமில்லாத ஒருநற்பண்பு மாகும்.

(6)

நாம் கூறியவாறு இந்தியாவில் பலநாடுகள் உண்டு என்ற கொள்கைப்படி, தமிழகம் தனி நாடாக ஆகிறது. இந்திய சமுதாயம் பல இனங்கள் அடங்கியது என்ற வாதப்படி தமிழர் தனி இனமாக ஆகிறுர்கள்.இனவாரி சுயநிர்ணயம், சுய அரசு என்ருல், தமிழருக்கும் சுயநிர்ணயம் சுய அரசு என்றே ஆகிறது. இந்தச் சுயநிர்ணயம் சுய அரசு உரிமை பிறர் கொடுத்துப் பெறவேண்டிய அவசிய மில்லாமல் தமிழரின் பிறப்புரிமையாக இருக்கிறது.

(7)

அவர்கள் திட்டப்படி இந்தியாவில் மாகாணங்களுக்கும் மத்திய சமஷ்டிக்கும் இடையில் 'ஏ,' 'பி,' 'சி,' என்ற மூன்றுவித உபசமஷ்டிகள் அமைக்கப்படும். 'ஏ' உபசமஷ்டியானது இந்து மாகாணங்கள் அடங்கியதாகவும், 'பி,' 'சி' ஆகிய இரண்டு உபசமஷ்டிகளும் முஸ்லீம் மாகாணங்கள் அடங்கியதாகவும் இருக்கும். இந்தத் திட்டப்படி தமிழ்நாடானது இந்து மாகாணங்களின் தொகுதியில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்படுகிறது. இதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வதானுல், தமிழகத்தில் தமிழரசு நடப்பதற்குப் பதிலாகத் தமிழகத்தில் இந்து இராச்சியம் நடப்பதாகவே ஏற்படும். இதனுல் தமிழினம் பிளவுபட்டு முடிவில் அழியவும் நேரும்.

(8)

ஜாதி, மதபேதமின்றித் தமிழரனைவரும் ஒன்றுபட்ட ஒரே இனமாக வாழமுடியாதபடிபிரித்து வைக்கவே பிரிட்டிஷ்திட்டம் அடிகோலுகிறது.

அரசியற் கருத்துக்கள்மட்டுமல்ல; சமுதாய சம்பந்தமாக நாம் கூறிவந்த கருத்துக்களையும், கண்டித்தவர்கள் அநேகம்—இன்றும் உள்ளனர் அத்தகையோர். ஆனல், பலர், அக்கருத்துக்களை, இன்று கூறமுன்வந்துள்ளனர்; அதுகாணப்,பகுத்தறிவுக் கதிரொளி பாய்கிறது என்று எண்ணிமகிழ்கிறேம்.

காரைக்குடி, 'குமரன்' பத்திரிகையில், புலவர் போட்டி என்றோர் பகுதி. புதப்புதுக்கவிஞர்களுக்கான இப்பகுதி பயன்படுகிறது. அதிலே, ஆகஸ்ட்மாத இதழிலே, வெளிவந்துள்ளசிலகவிதைகளைத்தருகிறேம்; பாருங்கள்; சொன்னேம்! சொல்கிறுர்கள்!! என்பதுடன்மட்டும் அமையவில்லை; கரடுமுரடான முறையிலே சொன்னேம், சுவைமிக்க கவிதை உருவிலே அவர்கள் சொல்கிறுர்கள் என்பது விளங்கும்.

மேலென்றும் கீழென்றும் மேதினியில் ஜாதியினை
நாலாய் வகுத்து நசுக்கிவிட்டான்—மேலும்
வகுத்தான் வகுத்தபடி வாழ்கின்ற வாழ்வைப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

இராம. வே. சேதுராமன், சிவாஜிதெரு நாச்சியாபுரம்.

ஓர் பிறப்பால் மக்கள் உயர்ந்தவரே யென்றுரைக்கும்
பேர்மிகுந்த பேரறிவு பெற்றவரே—தேர்ந்து
வகுத்துரைத்த வள்ளுவனர் வாய்மொழியைச் சற்றுப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

ராம. சோமசுந்தரம், கதிரேசன் கழகம், காரைக்குடி.

சாதி மதமென்று சங்கையில்லாப் பேதைமைகள்
ஓதித்திரிவதென்ன உத்தமனே—நீதி
வகுத்துரைத்த சூதர்மன வஞ்சம் அதனைப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

ப. அ. கருப்பன்செட்டியார், சிறுகூடற்பட்டி.

நாக்கிற் பொருத்தினனும் நான்முகனேர் வாணிதனை
நாக்கிற் பொருத்துதற்கு நாங்களென்ன—பாக்கா?
தகுதியிலார் பெண்கள் தனியிருக்க வென்றே?
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

S. V. செல்வம்மா, மங்கையர் மன்றம், புதுக்கோட்டை.

மண்ணை அளப்பதுவும் மாமலையைத் தூக்குவதும்
வெண்ணெய்த் திருடன் விளையாட்டோ;—எண்ணம்
மிகுத்த அறிஞர் உழைப்பன்றே? மேலோய்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

நாரா. நா. ஆத்தங்குடி.

நந்தன் மனிதனென நாதன் நினைத்திருந்தால்
செந்தணலில் மூழ்கிவரச் செப்புவரோ—சிந்தை
மிகவச்சங்கொண்டனரோ மேற்குலத்தாருக்கு? ஈதைப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

நா. வேந்தரசு, ஆத்தங்குடி.

பொய்யாம் புராணப் புளுகுகளைக்கூறி
மெய்யாகக் கோவில்தோறும் விழவே—செய்து
புகுத்தினர் தங்கொள்கை புரையாரியர் காண்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

மு. இளநாகன், மேலைச்சிவபுரி புதுவைத் தனியரசு.

கன்றை இழந்தாவின் கண்ணீராக் தன்மகனைக்
கொன்றுன்முன் சோழனெனக் கூறுபவர்—இன்று
மிகுத்தகொலை செய்தாலும் வீழ்த்துவரோ சேலைப்
பகுத்தறிவால் ஆராய்ந்து பார்.

மு. ரேங்கநாதன், புதுவயல்.

உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக்கைத்தறி கலர் புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-செ. நூலில் தயார்செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
84, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.



ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம் தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.

வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வாநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

ஆசிரியர்

2-ம் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளிக்கு ஒருநாளைக் குக்கூலி ஆறணு; ஏன்! மூன்றணுக்கூட உண்டு. ஒரு நாளைக்கு மூன்றணுபோதுமா? மந்திரியின் கவனம் இதில் சென்றதுண்டா? இல்லை.

கிராம அதிகாரிகளின் சம்பளம்மாதம் 8 ரூபாயும் 15ரூபாயுமாக இருக்கிறது. அவர்களின் அலுவல்கள் அதிகம், நிலச்சாகுபடி வரிவசூல், பிறப்பு இறப்பு மழை, தானியக்கணக்கு கிராமச்சங்கக் கணக்கு இவற்றை அவர்கள் விடிய விடிய உட்கார்ந்து எழுதுகின்றனர். போதாக்குறைக்கு இப்போது ரேஷன் கணக்குகள் வேறு. இத்தனையும் எழுதிவிட்டு அவர்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளம் 8 ரூபாய். இதை மந்திரிகள் வந்ததிலிருந்து கவனிக்கிருர்கள்.

இப்போது பிரதம மந்திரியார் தயாரித்துள்ள பட்ஜெட்டில் இவர்களுக்கோ (கிராம அதிகாரிகட்கோ) ஆசிரியர்களுக்கோ, ஒதுக்கிவைக்கப்பட்ட பணத்தைக்குறித்த விவரம் ஒன்றையும் காணேம். எவ்வளவு நாட்கள் தான் யோசனையிலிருக்கும் என்பது தெரியாது.

கிராமக்கணக்குப் பிள்ளைகள் ஜமாபந்தி என்றதணிக்கைக்குப்போனல், குமாஸ்தா குறைந்தது ஐந்துரூபாயின்றிக் கணக்கைத் தணிக்கை செய்வதில்லை. கணக்குப்பிள்ளை 5 நாள் காத்திருந்தாலும் ஐந்துரூபாயின்றி கணக்கு தணிக்கை செய்யப்படுவதில்லை. இந்த அநீதிக்கெல்லாம் எட்டுரூபாயும், பத்து ரூபாயும், பதினைந்து ரூபாயும் போதுமா? இதைக்குறித்து மந்திரி அவர்கள் ஏதாவது செய்திருக்கிருரா, என்ருல் அதுதான் இல்லை.

ஆசிரியர்கள் சம்பளம் பதினைந்துரூபாய். மந்திரிகளுக்குச் சம்பளம் அலவன்ஸ் உட்பட ஆயிரத்துஐந்நூறுரூபாய். மந்திரிகளுக்குச்சாப்பாடு மாதம் இருநூறுரூபாய், வீட்டு வாடகை நூறுரூபாய், காருக்குச்செலவு நூறுரூபாய், இதர செலவுகள் நூறுரூபாய், ஆகும் என்ருலும் ஒவ்வொருவருக்கும் ஐந்நூறு ரூபாய், போதுமானது. வீடும், காரும் சர்க்கார் செலவைச் சேர்ந்ததாகிவிட்டது. ஆகவே இவர்களுக்குச்சம்பளம் ஐந்நூறு ரூபாயே மிகமிக அதிகமானது. ஆனல் அவர்கள் ஒவ்வொருவரும் பெறும் சம்பளம் மாதம் ஒன்றுக்கு 1500 ரூபாய்.

ஏழைஆசிரியனுக்குச் சம்பளம்பதினைந்துரூபாய், அலவன்ஸ் பதினறு ரூபாய். இது அவனுக்குப்போதுமா? குடும்பச்செலவுகளைக் கவனிப்பான? வீட்டு வாடகை கொடுப்பான? துணிமணிகள் வாங்கச்செலவு செய்வான? இன்ஸ்பெக்டர் பள்ளிக்கூடத்தைத் தணிக்கை செய்ய வரும்போது அவருக்குச் சாப்பாட்டுக்காகச் செலவு செய்வான? எதற்கு அவன் செலவு செய்வான்? தன்குழந்தைகளைப் படிக்கவைக்கப் போதுமான பணம்கூட இல்லை அவனது சம்பளம்.

மந்திரிகள் யாருக்காவது அஞ்சப்போகிருர்களா? இல்லை. லஞ்சம் கொடுக்கிருர்களா? அதுவும் இல்லை. ஆனல் ஏழை ஆசிரியன் இன்ஸ்பெக்டரின் மிரட்டல் உருட்டல்களுக்குப் பயந்து எங்கே தனது சம்பளத்தில்ஒன்றிரண்டுரூபாய் பிடித்துக்கொள்கிருர்களோ என அஞ்சுகிருன்.

மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்து பலருக்குக்காட்சியளித்து வருகிருர்கள். தினந்தினம் பிரயாணம் தான். சுற்றுப்பிரயாணச் செலவுகளைப் பெற்றுக்கொள்கிருர்கள்.

ஆசிரியனுக்கு மாதம் ஒருமுறை பிரயாணம் இருக்கிறது. தனது ஊரிலிருந்து நாலைந்து மைல்தொலைவில் உள்ள ஊருக்குச் சென்ற ஆசிரியர்கள் சங்கக்கூட்டத்திற்கு ஆஜராகவேண்டும். இவ்விதமாக மாதம் ஒருமுறைசெல்லும் ஆசிரியனுக்கு மாதம் ஒருமுறை அலவன்ஸ் கொடுப்பதிலா குறைந்துவிடும்.

இந்தப் பட்ஜெட்டில் ஆசிரியனுக்குவிமோசனமில்லை. உண்ண உணவின்றி வாடும் ஆசிரியனுக்கு விமோசனமில்லை. உடுக்க உடையின்றித் தவிக்கும் ஏழைக்கு விமோசனமில்லை தரித்திரத்தில் உழலும் ஒரு ஆசிரியனுக்கு விமோசனமில்லை. அடுத்த பட்ஜெட் தயாரிப்பதற்குள் பஞ்சம் ஒழிந்து நாட்டில் மக்கள்மகிழ்ச்சியுடன் வாழுங்காலம் வந்துவிடும். அப்போது தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தப்போகின்ருர்களா? அடுத்த பட்ஜெட் தயாரிக்கும் வரை மந்திரிசபைஉயிரோடிருக்கிறதோ என்னவோ?

ஆசிரியர்கள் விஷயம் ஆலோசனையிலிருக்கிறதாம். ஆலோசனை முடிவதற்குள் அண்டமெலாம் அழிந்து விடும்போலும்! இன்று பசி! அதுவும் இப்போது பசி! இப்போது தேவையில்லாத உணவு நாளைப்பசிக்காத வேளையில் எதற்கு அவசியம்?

சென்ற ஜூலைமாதம் 27-தேதி நடந்த சம்பவம் ஆசிரியர்கள் அனைவர்க்கும்! ஏன தேசத்திற்கே நேர்ந்த அவமானமாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆசிரியர்களின் கோரிக்கைகளை இப்போதுள்ள மந்திரிசபை நிறைவேற்ருது என்பதற்கு இச்சம்பவம் ஒரு ஆணித்திறசான்ருகும்.

காங்கிரஸ் மந்திரிசபைவேண்டியவற்றைச் செய்யும் என எண்ணிக்கொண்டு எண்ணற்றவாக்காளர்கள் தங்கள் வாக்கைக் காங்கிரசுக்குக் கொடுத்தனர். ஆனல் அவர்கள் பெற்றகைம்மாறுஎன்ன? எதிர்பாராவிபத்துகள்!!

நாம் இருவர்

"நாம் இருவர்" என்ற தலைப்புடன் 'திராவிடநாடு' வெளியிட்ட கல்வித்திட்ட சம்பந்தமாக, எல்லாக் கட்சியிலும், உள்ள நேர்மையாளர் பலர், தமது ஆதரவைத்தருவதாகவும், அதற்காகத தனியானதோர் மாநாடுகூட்டி, கல்வியின்நிலை, மாணவர்கள் சேர்க்கப்படும் முறை, இனச்சிக்கல்கள், ஆசிரியர்கள் அல்லல், பாடத்திட்டங்களில் உள்ள குறைபாடுகள், இன்றைய மந்திரிசபை கையாளும் முறை ஆகியவைபற்றிக் கலந்தாலோசிக்க, "கல்வி மாநாடு" கூட்டவேண்டுமென்று யோசனை கூறிக்கடிதங்கள் அனுப்பியுள்ளனர். அவர்களின் சீரிய யோசனைக்குநமது நன்றி. அதற்காவனசெய்ய, இனிமுற்பட எண்ணுகிறேம்.

மொழிவாரிமாகாணங்கள்

31—8—46-ல் பாம்பே விவசாய மந்திரி தோழர் பி. பட்டீல் தலைமையில், மைசூரைச் சேர்ந்த தவான்சியரில் நடைபெற்ற அகில கர்நாடக இணைப்பு மாநாட்டின்போது பல பகுதிகளாகச் சிதறிக்கிடக்கும் கன்னடமக்களை ஒரு அரசியலின்கீழ் வாழவைப்பதற்குக் கன்னட மாகாணம் ஒன்று தனியாக இருக்கவேண்டிய அவசியம் எடுத்துப் பேசப்பட்டு, அது குறித்த ஒரு தீர்மானமும்நிறைவேற்றப்பட்டது. தோழர் கரந்த் அவர்களும் கர்நாடக மாகாணம் தனியாக இருக்கவேண்டுமென்பதற்குரிய காரணங்களை விளக்கிக் கூறினர்.

மொழிவாரிமாகாணங்களைப்பிரிப்பதையும் அவற்றிற்குரிய எல்லைகளை அமைப்பதையும் அரசியல் அமைப்புச் சபை விரைவில் ஆலோசித்து முடிவு செய்யவேண்டுமென்றும் அம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

தந்தி:- "புறுமார்க்" திருச்சி.

கிளி மார்க்
பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

ஏ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ.1155.
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.

திருமணம்.

திருவண்ணுமலையில் 'திராவிடநாடு' விற்பனையாளர் தோழர் R. S. நடேசன் அவர்களின் புதல்வன் குப்புச்சாமிக்கும் காஞ்சிபுரம் தோழர் வெங்கடாசலம் அவர்களின் புதல்வி நாகபூஷணத்திற்கும் காஞ்சிபுரத்தில் 30-8-46-ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.